## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2019ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது ஜனவரி 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 435**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 28.02.2019**

**பொருள் எண் 2**

குடிநீர் பணி திட்டதின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 3900 குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு ரூ.133.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 31.01.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட கீழ்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரர் ஒப்பந்த தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்பந்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.குமார் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 133.00 | 1,22,65,500 | 4.45 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L1) |
| 2 | வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 133.00 | 1,24,60,500 | 6.11 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L2) |

அலுவலக குறிப்பு

1. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணியினை உடன் துவங்க கோரப்பட்டுள்ளது.
2. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 27.2ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தபுள்ளிகளை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. 04.02.2019ம் தேதிய நகராட்சி பொறியாளர் 4.45 சதவிகிதத்தை ஏற்கலாம் என அறிக்கை சமர்பித்துள்ளார்.
3. தற்போது மேற்படி சாலைப்பணிகளுக்கு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளதால் இப்பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக செய்து தர கோரி (L1) ஒப்பந்ததாரரான திரு.ஜி.குமார் ஒப்பந்ததாரர் மன்னார்குடி அவர்களிடம் இவ்வலுவலக கடித ந.க.எண். 518/2018/இ1 நாள் 01.02.2019 கோரியதில் மேற்படி நிறுவனம் தங்களது தேதிய கடிதத்தில் குடிநீர் உதிரிபாகங்கள் விலை ஏற்றம் மற்றும் ஆட்கள் கூலி உயர்வின் காரணமாக இப்பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைத்து செய்ய இயலாது என தெரிவித்ததுடன் தான் தற்போது ஒப்பந்தபுள்ளியில் அளித்துள்ள 4.45 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகமான விலையிலேயே இப்பணியினை முடித்து தர சம்மதிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.
4. மதிப்பீட்டைவிட அதிகமாகும் 4.45 சதவீத தொகையை மதிப்பீட்டில் உள்ள குத்து மதிப்பு தொகை (LS) அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய வேண்டும்.
5. அலுவலக குறிப்பு 1 முதல் 4வரை உள்ள விபரங்களை மன்றம் பரிசீலனை செய்து வரப்பட்ட ஒப்பந்தபுள்ளியினை முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 518/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 436**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 28.02.2019**

பொருள் எண் 3

கூத்தாநல்லூர் நகராட்சியில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனத்தில் உள்ள நான்கு டயர்கள் பழுதாகி வாகனம் இயக்கமுடியாத நிலையில் உள்ளதால் புதிதாக நான்கு டயர்கள் ஒரு மாற்று டயர் உட்பட 5 டயர்கள் வாங்கி பொருத்தி தருமாறு ஓட்டுனர் திரு.என்.குகன் 20.02.2019 அன்று மனுவில் கோரியுள்ளார். எனவே எதிர்வரும் மக்களவை தேர்தல் நடக்க இருப்பதால் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் (ம) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அலுவலக ஆய்வ கூட்டங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதாலும் அவசர அவசியம் கருதி 5 புதிய டயர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவீனம் ரூ.38,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பாராளுமன்ற தேர்தல் மற்றும் அவசர பணிகளுக்கு ஈப்பு தேவைப்படுவதால் தமிழ்நாடு நகராட்சி சட்டவிதி 15ன் கீழ் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 59/2019/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 437** **நாள் 28.02.2019**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 4**

கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலக முன்புறம், உட்புறம், மற்றும் பின்புறம் ஆகிய இடங்களில் CCTV Camera அமைகக்கும் பணிக்கு 15.02.2017 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | EYE -Tech, APN Complex, Koothanallur | 23950 |
| 2 | Uma-Tech Panagal Road, Santhamangalam Tiruvarur | 24500 |
| 3 | HI-Tech Court Road, Sivaji Nagar Tanjore. | 25700 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள EYE-Tech, Koothanallur என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள EYE-Tech, Koothanallur என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண். 1696/2018/எச்1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 438** **நாள் 28.02.2019**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TATA ACE வாகனம் TN50X2638 வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் நாள் 31.01.2019ன்படி அனுமதிக்கப்பட்டு 26.02.2019 ஆம் தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரபெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 50,000 | 49,932 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | | 52,080 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 3338/2017/எச்1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 439** **நாள் 28.02.2019**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் 6

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட புதுப்பாலம் அருகில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணிக்கு 25.02.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | எக்ஸல் 23/1, கச்சேரி ரோடு மயிலாதுடுறை | 3,80,000 | 0.14% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | விஜயலெட்சுமி & கோ, 10ஏ, தெற்கு சாலியத் தெரு மயிலாடுதுறை | 3,80,000 | 0.27% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள எக்ஸல் 23/1, கச்சேரி ரோடு மயிலாதுடுறை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள எக்ஸல் 23/1, கச்சேரி ரோடு மயிலாதுடுறை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 484/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 440**
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது — நாள் 28.02.2019

பொருள் எண் 7

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட மன்னை மெயின்ரோடு அருகில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணிக்கு 25.02.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | எக்ஸல் 23/1, கச்சேரி ரோடு மயிலாதுடுறை | 3,80,000 | 0.14% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | விஜயலெட்சுமி & கோ, 10ஏ, தெற்கு சாலியத் தெரு மயிலாடுதுறை | 3,80,000 | 0.27% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள எக்ஸல் 23/1, கச்சேரி ரோடு மயிலாதுடுறை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள எக்ஸல் 23/1, கச்சேரி ரோடு மயிலாதுடுறை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 484/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 441**
அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது — நாள் 28.02.2019

பொருள் எண் 8

. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018–2019ன் கீழ் சிப்பம்–1ல் கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் மேல்கொண்டாழி லைன் மறறும் தமிழர் தெரு, மரக்கடை தெற்கு மற்றும் வடக்கு தெரு, பணங்காட்டாங்குடி நடுத்தெரு, கீழத்தெரு, அய்யப்பன் கோவில் தெரு, தீன் நகர், ஜன்னத் நகர் 2வது குறுக்கு தெரு மற்றும் எம்ஜிஆர் நகர் சாலைகளை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.178.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.02.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட கீழ்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தபுள்ளி கோரிய தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரர் ஒப்பந்த தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Shree Infrastructure Mannargudi | 178.00 | 1.56.92.774 | 3.00 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L1) |
| 2 | R.G.K. Infrastructure Mannargudi | 178.00 | 1.61.72.767 | 6.15 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L2) |

அலுவலக குறிப்பு

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக அனுமதியில் தார்சாலைகளை உடன் துவக்கியும் அனைத்து சாலைகளையும் எதிர்வரும் 01.04.2019 –க்குள் முடிக்கப்பட வேண்டும் என கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
2. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 2.7 2ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தபுள்ளிகளை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. 27.02.2019ந் தேதிய நகராட்சி பொறியாளர் 3% சதவிகிதத்தை ஏற்கலாம் என அறிக்கை சமர்பித்துள்ளார்.
3. தற்போது மேற்படி சாலைபணிகளுக்கு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளதால் இப்பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக செய்து தர கோரி L1 ஒப்பந்ததாரரான Shree Infrastructure ஒப்பந்ததாரர் மன்னார்குடி அவர்களிடம் இவ்வலுவலக கடித ந.க.எண். 16/2019/இ1 நாள் 26.02.2019 கோரியதில் மேற்படி நிறுவனம் தங்களது 26.02.2019 தேதிய கடிதத்தில் தான் ஏற்கனவே ஒப்பந்தபுள்ளியில் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 6 சதவிகிதம் விலை உயர்வினை 3 சதவிகிதமாக குறைத்து இப்பணியினை முடித்து தர சம்மதிக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.
4. மதிப்பீட்டைவிட அதிகமாகும் 3.00 சதவீத தொகையை மதிப்பீட்டில் உள்ள குத்து மதிப்பு தொகை (LS) அல்லது நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்ய வேண்டும்.
5. அலுவலக குறிப்பு 1 முதல் 4 வரை உள்ள விபரங்களை மன்றம் பரிசீலனை செய்து வரப்பட்ட ஒப்பந்தபுள்ளியினை முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1379/2018/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 442 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் 9

. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018–2019ன் கீழ் சிப்பம் – 2ல் கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் பாய்க்கார புதுத்தெரு, கரும்புகொல்லை தெரு, நேருஜி ரோடு, முகமது அலி தெரு, இஸ்மாயில் தெரு, கோரையாறு வடக்கு தெரு, மற்றும் மரக்கடை மெயின் ரோடு சாலைகளை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.143.77 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.02.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட கீழ்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தபுள்ளி கோரிய தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரர் ஒப்பந்த தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | R.G.K. Infrastructure Mannargudi | 143.77 | 127.59.073 | 3.00 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L1) |
| 2 | Shree Infrastructure Mannargudi | 143.77 | 131.49.338 | 6.15 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L2) |

அலுவலக குறிப்பு

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக அனுமதியில் தார்சாலைகளை உடன் துவக்கியும் அனைத்து சாலைகளையும் எதிர்வரும் 01.04.2019–க்குள் முடிக்கப்பட வேண்டும் என கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
2. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 2.7 2ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தபுள்ளிகளை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. 27.02.2019ந் தேதிய நகராட்சி பொறியாளர் 3% சதவிகிதத்தை ஏற்கலாம் என அறிக்கை சமர்பித்துள்ளார்.
6. தற்போது மேற்படி சாலைபணிகளுக்கு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளதால் இப்பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக செய்து தர கோரி L1 ஒப்பந்ததாரரான திரு.ஜி.குமார் ஒப்பந்ததாரர் மன்னார்குடி அவர்களிடம் இவ்வலுவலக கடித ந.க.எண். 1379/2018/இ1 நாள் 26.02.2019 கோரியதில் மேற்படி நிறுவனம் தங்களது 26.02.2019 தேதிய கடிதத்தில் தான் ஏற்கனவே ஒப்பந்தபுள்ளியில் அளித்துள்ள மதிப்பீட்டைவிட 6 சதவிகிதம் விலை உயர்வினை 3 சதவிகிதமாக குறைத்து இப்பணியினை முடித்து தர சம்மதிக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.
3. மதிப்பீட்டைவிட அதிகமாகும் 3.00 சதவீத தொகையை மதிப்பீட்டில் உள்ள குத்து மதிப்பு தொகை (LS) அல்லது நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்ய வேண்டும்.
4. அலுவலக குறிப்பு 1 முதல் 4 வரை உள்ள விபரங்களை மன்றம் பரிசீலனை செய்து வரப்பட்ட ஒப்பந்தபுள்ளியினை முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1379/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 443**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 28.02.2019**

**பொருள் எண் 10**

தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு கூத்தாநல்லூர் நகராட்சி 12 Nos(BOV) பேட்டரியால் இயங்கும் வாகனம் மற்றும் 2 No (LCV) இலகுரக வாகனம் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலக வெளியீட்டு ஆணை எண் 06/ஒப்பந்தபுள்ளி/விளம்பரம்/2019 நாள் 29.01.2019 அன்று தினமணி நாளிதழ்க்கு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை தினமணி நாளிதழில் 30.01.2019 அன்று வெளியிடப்பட்டது. அதற்கான பட்டியல் எண் NGTTN100006664 Dt 30.01.2019ன்படி ரூபாய் 3214/– தினமனி நாளிதழ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1388/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 444**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 28.02.2019**

**பொருள் எண் 11**

நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் சிப்பம் 1– சாலைப்பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்களுக்கு ஒப்பந்தபுள்ளி அனுப்பப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை Bright Advertising , Chennai நிறுனம் மூலம் Deccan Choronide நாளிதழ் மற்றும் மக்கள் குரல் நாளிதழில் 02.09.2018 அன்று விளம்பரம் வரப்பட்டது. மேற்படி விளம்பரத்திற்கான பட்டியல் எண் DIPR/5149/CH5/2016-2017 நாள் 003.09.2018ன்படி கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | Decaan chronide நாளிதழ் | ரூ.34,650.00 |
| 2 | மக்கள் குரல் நாளிதழ் | ரூ. 33,750.00 |
| | மொத்தம் | ரூ.68,400.00 |
| | SGST 2.5% | ரூ. 1710.00 |
| | CGST 2.5% | ரூ. 1710.00 |
| | ஆக கூடுதல் | ரூ. 71,820.00 |

மேற்படி பட்டியல் தொகை ரூ.71,820/.யினை Bright Advertising , Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 535/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 445**

**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது** **நாள் 28.02.2019**

பொருள் எண் 12

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் டம்பர் பின் வாகனத்தில் உள்ள டெம்பர் பின் தொட்டிகள் 12 பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் நாள் ன்படி அனுமதிக்கப்பட்டு 12.02.2019 ஆம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | ஆர்.செந்தில் நாகை சாலை கொரடாச்சேரி | 3,60,000 | 3,58,000 |
| 2 | எஸ்.விஸ்வா வெல்டிங் ஒர்க்ஸ் மன்னை சாலை நீடாமங்கலம் | | 3,59,500 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஆர்.செந்தில் ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஆர்.செந்தில் ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண். 60/2019/எச்1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 446** **நாள் 28.02.2019**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 13**

இந்நகராட்சி பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நகர்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கான ஒருமுறை சிறப்பு நிதியாக ரூ.2,000/– வழங்கும் திட்டத்திற்கு புதியதாக விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டி உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி 2000 எண்ணிக்கை விண்ணப்பம் படிவங்கள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் திருச்சி என்ற துப்புரவு சங்கத்தில் நேரடியாக கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர மன்ற தீர்மானம் எண்:- 447** **நாள் 28.02.2019**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 14**

கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் 15.11.2018 அன்று வீசிய கஜா புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்யவும் புயலினால் வேரோடு சாய்ந்த மரங்களை அப்புறப்படுத்தவும், போக்குவரத்தினை உடனடியாக சரி செய்யவும், குடிநீர் விநியோகம் செய்யவும், சேதமடைந்த மின்விளக்குகளை பழுது பார்க்கவும், அறுந்து விழுந்த மின்கம்பங்களை சரி செய்யவும், ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/–க்கும், JCB மற்றும் கனரக வாகனங்களை கொண்டு உடனடியாக சரி செய்யப்பட வேண்டியிருந்த காரணத்தாலும், மற்றும் வேறு நகராட்சிகளிலிருந்து வரப்பெற்ற துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கும், முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த பொதுமக்களுக்கும் உணவு தயாரித்து வழங்குவதற்காகவும் பொது மக்கள் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும், போர்க்கால அடிப்படையில் பணி மேற்கொள்ள வேண்டியிருந்த காரணத்தினாலும், இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளருக்கு ரூ.4,00,000/–ம் மற்றும் இளநிலை பொறியாளருக்கு ரூ.80,000/–ம் ஆக கூடுதல் தொகை ரூ. 4,80,000/– அலுவலக முன்பணமாக வழங்கப்பட்டதற்கு மேற்படி முன்பணத்தினை ஈடு செய்யுமாறு கோரி உரிய ஆவணங்களுடன் மேற்படியாளர்கள் தனது 16.02.2019 மற்றும் 17.02.2019ம் தேதிகளில் விண்ணப்பித்துள்ளனர். எனவே மேற்படியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணத்தினை ஈடு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1341/2018/இ1)

**நகர மன்ற தீர்மானம் எண்:- 448** **நாள் 28.02.2019**
**அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் 15

கூத்தாநல்லூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிட திறப்பு விழா 17.02.2019 அன்று திறக்கப்பட்டது. மேற்படி கட்டிட திறப்பு விழா விளம்பரம் தினத்தந்தி, தினகரன், தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | The Daily Thanthi நாளிதழ் (தினத்தந்தி) Bill No TNJ1819/0015284 நாள் 17.02.19 SGST 2.5% + CGST 2.5% உட்பட | ரூ. 22,365.00 |
| 2 | Kal ßblcatons(P) Ltd (தினகரன்) நாளிதழ் Bill No 3300138778 Dt.17.02.2019 SGST 2.5 % + CGST 2.5% உட்பட | ரூ. 17,136.00 |
| 3 | தினமணி நாளிதழ் SGST 2.5 % + CGST 2.5% உட்பட | ரூ.16,800.00 |

மேற்படி மூன்று நாளிதழ்களுக்கு ரூ.56,301/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 2474/2014/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 449 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் 16

இந்நகராட்சிக்குட்பட்ட கீழபணங்காட்டாங்குடி OHT-யில் 2 HP Submersible Motor, HIDE Hose Cable மற்றும் உதிரிபாகங்கள் கொண்டு அமைக்கும் பணிக்கு மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எம்.உதயகுமார் மரக்கடை மெயின் ரோடு | 46,000 |
| 2 | இந்தியன் எலக்ட்ரிக்கல்ஸ் லெட்சுமாங்குடி கடைத்தெரு | 46,180 |
| 3 | கவி சங்கர் பைப்ஸ் கார்ப்பரேஷன் திருவாரூர் | 46,250 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள திரு.எம்.உதயகுமார் விலைப்புள்ளிதாரர் மரக்கடை மெயின் ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள திரு.எம்.உதயகுமார் விலைப்புள்ளிதாரர் மரக்கடை மெயின் ரோடு என்பவரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1353/2018/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 450 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் 17

இந்நகாட்சியின் வரவுசெலவு குறித்து தயாரிக்கப்பட்டுள்ள 2018-19 ம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2019-2020ம் நிதியாண்டிற்கான உத்தேச மதிப்பீடு தயார்செய்து மன்றத்தின் அனுமதிக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 162/2019/பி1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 451 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் 18

இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யம் பணிகளை ஒப்பந்தபுள்ளி ஏப்ரல் –2019 உடன் முடிவடைவதால் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி பணிகள் தொடர்ந்து நடைபெற குடிநீர் பணிக்காக 6 பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் ஊதிய விகிதம் 303 x 6 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரு.1818,00 X 30 நாட்களுக்கு ரூ.54,540/– ஆகும். மேலும் 12 மாத காலத்திற்கு 54540X12=6,54,480(or)6,55,000 க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் வர இருப்பதால் ஒப்பந்தபுள்ளி கோர கால அவகாசம் இல்லை. அதனால் ஏற்கனவே உள்ள அதே விலை விகிதத்தில் மேலும் இரண்டு மாத காலத்திற்கு (மே, ஜீன் மாதம) நீட்டிப்பு செய்யவும், மேலும் அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கவும், இரண்டு மாத காலம் நீட்டிப்பு செய்ய ஆகும் கூடுதல் தொகையாக ரூ.54540X2 = 1,09,080/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 187/2015/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 452 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் 19

இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 40 துப்புரவு பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி சமுதாய உரக்கிடங்குகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் ஏற்கனவே இப்பணிக்காக இந்நகர் மன்ற தீர்மான எண் 262 நாள் 28.02.2018ல் ரூ.50 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சியர், திருவாரூர் அவர்களின் தினக்கூலி விலை விகித அடிப்படையில் மேற்படி 40 பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு **தி கரன் சமூக தொண்டு நிறுவனம்** மூலம் 01.04.2018 முல் 31.03.2019 வரை பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் மார்ச் 2019 மாதத்தில் அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளதால் 31.03.2019 ல் மேற்படி பணிக்கான கால அவகாசம் முடிவடைவதாலும், இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளி எதுவும் கோரப்பட இயலாத நிலையில் உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மேற்படி பணியினை 01.04.2019 முதல் 30.06.2019 வரை மேற்படி ஒப்பந்ததாரர் மூலமாகவே ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மேற்கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.12,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.04.2019ந் தேதி முதல் 30.06.2019 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 232/2018/எச்1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 453 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் 20

இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க 2000 மக்கள் தொகைக்கு ஒரு தற்காலிக மஸ்தூர் வீதம் 13 மஸ்தூர்கள் இந்நகர் மன்ற தீர்மான எண் 317 நாள் 30.04.2018 டிசம்பர் 2018ம் மாதம் வரை பணி செய்ய அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 23.04.2018ந் தேதிய கடிதம் ந.க.எண். 2571/2017/ஜெ1 ல் கொசுக்களினால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தும் பணி தொய்வில்லாமல் நடைபெற டெங்கு பணியாளர்கள் வருடம் முழுவதும் தொடர்ந்து பணியமர்த்திக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நகர் மன்ற தீர்மான எண் 420 நாள் 31.12.2018ல் 31.03.2019 வரை மூன்று மாதங்கள் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மார்ச் 2019ல் நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாலும், புதிதாக இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளி எதுவும் கோரப்பட இயலாத நிலையில் உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மேற்படி பணியினை 01.04.2019 முதல் 30.06.2019 வரை மேற்படி ஒப்பந்ததாரர் மூலமாகவே ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்திலேயே மேற்கொள்ள உத்தேச செலவு தொகை ரூ.3.30.000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.530/2018/எச்1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 454 நாள் 28.02.2019

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யப்பட்டது